**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) SC.15/2024
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | அன்னபூர்ணம் | -- | |
| Husband Name | காஜேந்திர குமார் | Calling | தையல் வேலை |
| Village | சேத்தூர் | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையம் தாலுகா சேத்தூர் அம்மன் சன்னதி தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தையல் வேலை செய்து வருகிறேன். என் கணவர் காஜேந்திர குமார் தேங்காய் வெட்டும் வேலை செய்து வருகிறார். எங்களது ஊரைச் சேர்ந்த ஆஜர்எதிரியான ஈஸ்வரன் என்பவர் எனது கணவருடன் தேங்காய் வெட்டும் வேலை பார்த்து வருகிறார். அவர்கள் இருவரும் சேர்ந்து அடிக்கடி மது அருந்தி வருவார்கள். கடந்த 07.03.2023 ம் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஆஜர் எதிரி எனது கணவரிடம் மது வாங்கி கொடுக்க சொல்லி தகராறு செய்து சண்டை போட்டுள்ளார். 07.03.2023 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும் எனது கணவரும் சேத்தூர் மேட்டுபட்டி செல்வதற்காக கண்ணன் நகை கடை அருகில் கிழக்காமல் சென்றுக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அங்கு வந்து எனது கணவரை பார்த்து ஏன் தேவடியா பையலை இதோடு செத்து தொலை என்று சொல்லி அவரது சட்டைக்குள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து எனது கணவரின் கழுத்தை நோக்கி வெட்ட வந்தார். அப்போது எனது கணவர் வலது கையால் அதை தடுத்ததில் வலது கையில் காயம் ஏற்பட்டது. எனது கணவர் கீழே விழுவும் எதிரி எனது கணவரின் தலையில் மாறி மாறி வெட்டி காயம் ஏற்படுத்தினார். இந்த சம்பவத்தை அங்கிருந்த கனகராஜும், சிவகணேசனும் பார்த்தார்கள். அவர்கள் ஏலே ஏலே சத்தம் போட்டவுடன் எதிரி அரிவாளுடன் கிழக்காமல் சென்றுவிட்டார். எனது கணவருக்கு வலது கை மணிக்கட்டு, வலது பக்க தலை, தலையின் பின் பக்கத்தில் காயங்கள் ஏற்பட்டது. எனது கணவர் கையால் தடுக்கவில்லை என்றால் அரிவாள் வெட்டு எனது கணவரின் கழுத்தில்பட்டு அந்த இடத்திலேயே இறந்து போயிருப்பார. உடனடியாக எனது கணவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்தோம். நானும் கனகராஜும், சிவகணேசனும் மேற்படி ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு வந்த போலீசாரிடம் நான் நடந்த சம்பவத்திற்கு ஒரு புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நான் கொடுத்த **புகார் வாக்குமூலம் அதசாஆ 1** ஆகும். எனது கணவரை எதிரி வெட்டுவதற்கு பயன்படுத்திய அரிவாளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் **அரிவாள் சாபொ.1** ஆகும். எனது கணவருக்கு ஏற்பட்டிருந்த காயத்தின் விளைவாக அவர் மோசமான நிலையில் இருந்ததால் உடனடியாக அவரை திருநெல்வேலி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்படி மருத்துவர் கூறினார். ஆனால் நாங்கள் வேறு ஒரு தனியார் ஆம்புலன்சில் எனது கணவரை மதுரையிலுள்ள ப்ரித்தி மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்தோம். எனது கணவர் சுமார் 15 நாட்கள் அங்கு சிகிச்சையில் இருந்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of February 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**